1971 ஜூலை 16]

திரு. கா. வேழவேந்தன் : நக்சல்பாரிகள் ஆந்திராவில் ஸ்ரீகாகுளம் பகுதியிலும், கேரளாவின் சில பகுதிகளிலும் ஆடிய வெறியாட்டங்களைப் பற்றி அவ்வப்போது ஏடுகளில் செய்திகள் வந்தன. சமுதாயத்தில் இருக்கும் இளைஞர்கள் இந்த இயக்கத்தில் சேர்ந்தால் இந்தமாதிரி பயங்கரமான கேடுகள் ஏற்படும் என்பதை அறிந்து கொள்ளும் வகையில் அந்த நிகழ்ச்சியை அரசு பத்திரிகையில் வெளியிட்டு அதில் இளைஞர்கள் பங்கு பெறாமல் இருக்க உரிய எச்சரிக்கையைச் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவை சில பத்திரிகைகளில் வெளியிடப் படுகின்றன. அவைகள் வெளியிடுவதன் காரணமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணத்திற்கு மாறாக தூண்டுதல் உணர்ச்சி கூட ஏற்பட்டு விடும். இவைகளை ஆராய்ந்துதான் செய்யவேண்டும். ஜனநாயகத்தில் நம்பிக்கையும், அதே நேரத்தில் இந்தியாவின் எதிர்கால வளத்தில் ஆர்வமும், அக்கறையும் உள்ளவர்கள் எந்த முறையில் நாட்டு மக்களைப் சுபிட்சப் பாதைக்கு அழைத்துச் செல்லலாம் என்பதைப் பற்றி பிரசாரம் செய்வது பயன்தரக்கூடும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தப் பயங்கரமான இயக்கத்தைச் சட்ட பூர்வமாகத் தடை செய்ய மத்திய அரசும், மாநில அரசாங்கங்களும் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதில் மத்திய அரசு தான் சட்டபூர்வமாக இந்த இயக்கத்தைத் தடை செய்கின்ற பணியைச் செய்ய வேண்டும். மத்திய அரசு இதனைத் தடை செய்யும் நேரத்தில் அதற்குக் குறுக்கே மாநில அரசுகள் நிற்காது என்று கருதுகிறேன்.

*259 வினா—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் ஆபீஸில் குமாஸ்தாவாக பணி புரிந்த எவரேனும் நக்சல்பாரி என்பதற்காக கைது செய்யப்பட்டாரா ?

(இ) ஆம் எனில், அவர் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (இ) : கேரள மாநில அரசால் தேடப்பட்டு வந்த ஒரு நக்சல்பாரிக்குப் புகலிடம் கொடுத்ததற்காக நாகர் கோயில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் பணியாற்றி வந்த உதவியாளர் ஒருவர் 22—4—71-ல் கேரள மாநில எல்லைகளுக்குள் கைது செய்யப் பட்டார். கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை காவல் நிலையத்தில் அவர் மீது வழக்கொன்று விசாரணையில் உள்ளது. அவர் அலுவலகத்திற்கு வராமலிருந்த நாளான 6—4—71 லிருந்து கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவரைத் தற்காலிகமாக வேலையிலிருந்து நிறுத்தி வைத்துள்ளார்.

திரு. கோவை செழியன் : தனிப்பட்ட முறையில் கொலை செய்பவர்கள், கொள்ளையடிப்பவர்கள் கூட, தாங்கள் பிடிப்பட்ட நேரத்தில் தங்களை நக்சல் பாரிகள் என்று சொல்லிக் கொள்வதாகச் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட செய்திகள் உண்மையா ? சமீபத்தில் உடுமலைப்பேட்டையில் • நடைபெற்ற கொலை அவர்களால் நடத்தப்பட்டதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: உடுமலைப்பேட்டையில் நடத்தப்பட்ட கொலை நக்சல்பாரிகளால் நடத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. சாதாரண மாக கொலை, கொள்ளை செய்பவர்கள் கூட நக்சல்பாரிகள் என்று சொல்லிக் கொள்வதாகக் குறிப்பிட்டார்கள். அப்படிக் கூறினாலும் அவர்கள் உண்மை யிலேயே நக்சல்பாரிகள்தானா அல்லது வேண்டுமென்றே சொல்லிக் கொள்ளு கிறார்களா என்பதை எல்லாம் காவல்துறையினர் சரியாக ஆராய்ந்து முடிவு எடுக்கிறார்கள்.

திரு. கே. ஏ. வகாப்: அலுவலகத்தில் வேலை செய்பவர்களிடத்தில் மட்டு மல்லாமல் மாணவர்களிடத்திலும் இந்த இயக்கம் வளர்ந்து பரவிவருகிறது என்பதை அரசு அறியுமா? அப்படிப்பட்ட ஒருவர் வட ஆற்காடு மாவட் டத்தில் ஆசிரியராக நியமிக்கப்பட்டு அதன்பிறகு சஸ்பெண்ட் செய்யப்பட்டார். படித்து வேலை இல்லாதவர்கள், கல்லூரி மாணவர்கள் இதிலே ஈடுபட்டால், காந்திய வழியில், அண்ணா வழியில் போதனைகளை அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பூக்களுக்குள்ளே பூ நாகம் இருக்கிறது. அதைப் போல் கல்லூரிகளிலும், மற்ற இடங்களிலும் இந்த நிலைமை உருவாகி யிருக்கிறது என்பதை மறுக்கவில்லை. காந்திய வழி, அண்ணா வழி, சமரச சன்மார்க்க வழியில் நாட்டின் எதிர்காலத்தை ஒளி மயம் ஆக்குவதற்காக அவர் களிடையே ஏற்கெனவே பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது.

திருப்பூர் திரு. எ. எம். மொய்தீன்: தலைவர் அவர்களே, இந்த நக்சல்பாரிகள் என்று சொல்கிறவர்கள் செய்யும் கொலைக்கும் அப்படி அல்லாதவர்கள் செய்யும் கொலைக்கும் சர்க்கார் ஏதாவது வித்தியாசம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கொலை செய்தவர்களை ஆராய்ந்து அந்த வித்தியாசத்தை காவல்துறையினர் கண்டு பிடிக்கிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, நாகர்கோவிலில் நில மறு அளவு, ரீ சர்வே பார்டி, ஆபீஸிலிருந்த ஒரு வேலையாளை இந்த இயக்கத்தில் ஈடுபட்டவர் என்று சொல்லி அரெஸ்ட் செய்து விடுதலை செய்ததுண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தனிக் கேள்வி கேட்டால் பதில் தயாரித்துத் தரலாம்.

பல்லடத்தில் சிறு தொழில்

*266 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறு தொழில் கார்ப்பரேஷன் மூலம் பல்லடத்தில் சிறு தொழில் ஆரம்பிக்க அரசிடம் ஏதேனும் திட்டம் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.